சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி – திரு.பி. தங்கமணி, உதவி செயற்பொறியாளர் – 2005–2006–ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர்களின் பதவி உயர்விற்கான உதவி செயற்பொறியாளர்களின் தேர்ந்தோர் பட்டியலில் சேர்க்கக் கோரியது – ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப3(1)) துறை

அரசாணை(ப) எண் 213 நாள் 22.5.2008

வைகாசி 9, திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்கப்பட்டது:

1. அரசாணை (2ப) எண் 13, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 01.03.2006
2. அரசு கடித எண் 15504/நப3(1)/2006–1, நாள் 06.07.2006.
3. அரசாணை (ப) எண் 70, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப2) துறை, நாள் 20.02.2008
4. திரு. பி. தங்கமணி, உதவி செயற் பொறியாளரின் 05.03.2008 நாளிட்ட கடிதம்.
5. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.14409/2007/எப்1, நாள் 24.03.08

*****

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2005–2006–ஆம் ஆண்டிற்கான செயற் பொறியாளர்களின் பதவி உயர்விற்கான, கீழ்க்காணும் ஆறு உதவி செயற் பொறியாளர்கள் அடங்கிய பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது :-

திருவாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஜி. இராஜேந்திரன் | உதவி செயற்பொறியாளர் |
| 2. | கே. கௌதமன் | உதவி செயற்பொறியாளர் |
| 3. | கே. இராஜேந்திரன் | உதவி செயற்பொறியாளர் |
| 4. | பி. தங்கமணி, | உதவி செயற்பொறியாளர் |
| 5. | கே. ரவி, | உதவி செயற்பொறியாளர் |
| 6. | எஸ். திருமாவளவன் | உதவி செயற்பொறியாளர் |

மேற்காணும் பட்டியலில் வரிசை எண் 4–ல் காணும் உதவி செயற்பொறியாளரான திரு. பி. தங்கமணி என்பவரது பெயர், அவர் மீது தமிழ்நாடு நகராட்சிப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் விதி 8(2).–ன் கீழ் குற்றச்சாட்டுகள் நிலுவையில் இருந்ததன் காரணமாக மேற்காணும் பட்டியலிலிருந்து, நீக்கக் கோரி பெறப்பட்ட செயற்குறிப்பின் அடிப்படையில், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில், அவர் பெயர் மேற்காணும் பட்டியலிலிருந்து நீக்கம் செய்யப்பட்டது,

2. தற்போது மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், உதவி செயற்பொறியாளர், திரு.பி. தங்கமணி, மீது பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, ஆணையிடப்பட்டுள்ளது என்றும், எனவே, தனியரின் பெயரினை 2005–2006–ஆம் ஆண்டிற்கான நகராட்சிப் பொறியாளர்களின் தேர்ந்த பெயர்பட்டியலில் வரிசை எண் 3–ல் காணும் திரு கே. ராஜேந்திரன் என்பவரின் பெயருக்கு கீழும் வரிசை எண் 5–ல் காணும் திரு.கே. ரவி என்பவரின் பெயருக்கு மேலும் சேர்த்து, வரிசை எண் 4 என

நிர்ணயிக்கக் கோரி, மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மனுதாரர் அளித்துள்ள கோரிக்கையினை பரிந்துரை செய்வதாக நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

5. நகராட்சி நிர்வாக ஆணையரின் மேற்காணும் செயற்குறிப்பு விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில், உதவி செயற் பொறியாளராகப் பணியாற்றும் திரு. பி. தங்கமணி, அவர் மீது பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டதையடுத்து, அவரது பெயரினை 2005–2006–ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர்களின் தேர்ந்த பட்டியலில் வரிசை எண் 3–ல் காணும் திரு கே. ராஜேந்திரன் என்பவரின் பெயருக்கு கீழும் வரிசை எண் 5–ல் காணும் திரு.கே. ரவி என்பவரின் பெயருக்கு மேலும், வரிசை எண் 4 என நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், தனியரின் ஊதியத்தினை அடிப்படை விதி 27–ல், முறைமை 17–ன் படி கருத்தியலாக (Notional) நிர்ணயம் செய்யவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்
திரு.பி. தங்கமணி, உதவி செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை–5. (நகராட்சி நிர்வாக ஆணையர் வழிமுறையாக)
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–105
நகல் : நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந,2)துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

R Ravi
22.5.08
பிரிவு அலுவலர்